முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 580**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**01.05.2021**, சனிக்கிழமை

1. ஞான சக்தியாய் வந்த குருவே
ஞானிகள் சபை கொண்டு கலியுகத்தில்
தானதர்மம் கூட்டி உலகோர்க்கு
தனித்துவம் அருள வரமாகவந்த
2. வந்தநல் ஞானியே அரங்கனே
வள்ளலே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
சிந்தைபட ஞான அறிவுரை ஆசி
செப்பிடுவேன் இனிதே பிலவ தகர்திங்கள் தன்னில்
3. தன்னிலே அரங்கனின் தர்மம்
தரணியை அற்புதம்பட பாதுகாக்கும்
இன்னலான நிலைகளிலும் அரங்கன் கொள்கை
இனிதே காத்து வழிநடத்தும்
4. வழிநடத்த வரம்பெற்று வந்த அரங்கா
வையகத்தை காத்து உலகோரிடை இனிதே
தெளிவுதிடம் ஞானபலம் தந்தருளி
தேசத்தில் பலகோடி ஞானியர்களை உருவாக்கி
5. உருவாக்கி ஞானயுகம் படைத்திட உருவெடுத்த அரங்கனே உந்தனுக்கு
உந்தனுக்கு சுப்ரமணியர் யானும் இனிதே உயர்வாக சக்தி ஊட்டி உடனிருக்க
சிந்தைவைத்து உன்னோடு கலப்பவர்க்கு
சித்தி முத்தி எந்தன் அருளால் உறுதிஉறுதி
6. உறுதிகொண்டு உன்வழி வந்துவிட
உலகமே ஞானயுகமாற்றம் பெறும்
கருதிகருதி உன் தர்மத்தில் கலியுகத்தார் பங்களித்து தொடர்பு கூட்ட
கூட்டவே தர்மலோகம் ஆகி இனிதே குவலயம் அரங்கன் உன்னால் ஞானலோகமாகுமப்பா
7. அப்பப்பா அரங்கனே அனைத்து ஞானிகளும்
அற்புதமாய் உன் தர்மத்தை காத்துவர
ஒப்புகொண்டால் இந்த உலகம் உடன் பாதுகாப்பு பெறும்
ஓதிய சுப்ரமணியப்பெருமான் என் ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.